# தேசிய கல்வி நிறுவகம்

## விசேட கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2024

**விண்ணப்பம் கோரல்**

தேசிய கல்வி நிறுவகத்தின், உட்படுத்தற் கல்வித்துறையினால் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**கற்கைநெறியின் இயல்பு :**

இது, பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, உடல்சார்ந்த குறைபாடு, மந்தநிலை, ஒட்டிசம் நிலை, வேறு கற்றல் குறைபாடுகளால் ஏற்படுகின்ற கற்றல் பிரச்சினைகள் மற்றும் விசேட கல்வித் தேவைகளை எதிர்நோக்கும் மாணவர்களை இனங்கண்டு, அவர்களை விருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் பகுதி நேரக் கற்கைநெறியாகும். விரிவுரைகள் நிகழ் நிலையிலும், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விசேட பாடசாலைகளில் செய்முறை அமர்வுகள் நேரடியாக நடைபெறும். உயர் கல்வி அமைச்சினால் பாடநெறி தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தராதர நியமங்களின் அடிப்படையில் (SLQF level 3 - Sri Lanka Qualifications Framework) இக் கற்கைநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

**2024.10.15** அன்று 55 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்.

**க.பொ.த (உ/த)** சித்தியடைந்து இருத்தல்.

**அத்துடன்**

அரசாங்க அல்லது அரசாங்க அனுமதி பெற்ற பாடசாலையொன்றில் அல்லது பிரிவேனா ஒன்றில் ஆசிரியராக இருத்தல்.

**அல்லது**

தேசிய கல்வியற் கல்லூரியொன்றில் அல்லது ஆசிரியர் கலாசாலையொன்றில் கல்வியியலாளராக இருத்தல்.

**அல்லது**

இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் சேவையாற்றும் அதிகாரியாக இருத்தல்.

**அல்லது**

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அதிகாரி அல்லது விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்கான ஓர் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அல்லது நிறுவனத்தில் கடமையாற்றுபவராக இருத்தல்.

**கற்கைநெறிக்குப் பயிலுனர்கள் தெரிவு செய்யப்படும் விதம்** :

எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையினூடாக அல்லது இரண்டில் ஏதேனும் ஒரு முறையின் கீழ் கற்கைநெறிக்கான பயிலுனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**கட்டண விபரம்:**

| விபரம் | கட்டணம் |
|---|---|
| **விண்ணப்பப்படிவக் கட்டணம்** | **ரூபா 200.00** |
| **பதிவுக் கட்டணம்** | **ரூபா 1000.00** |
| **கற்கைநெறிக்கட்டணம்** | **ரூபா 40000.00 இரு** சம தவணைகளாகச் செலுத்த முடியும் |

- ✓ **அனைத்து கொடுப்பனவுகளையும் வங்கி அட்டைகள் ஊடாக (Credit** அல்லது **Debit) செலுத்த முடியும்**

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், தேசிய கல்வி நிறுவக, பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி https://www.exams.nie.lk/intakes/new ஊடாக நிகழ் நிலையில் மாத்திரம் விண்ணபிக்க முடியும். விண்ணப்பிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை (https://www.exams.nie.lk/info/applying-for-new-enrollments) எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்படிவம் விண்ணப்பித்தற்குரிய இறுதி திகதி: **2024.10.15**

**மேலதிக தகவல்களுக்கு 011760657 நீட்சி 661,662,659**

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம.**
**2024.08.28**